**முன்கூட்டிய பாதுகாப்புக் கல்வி -** Heilpädagogische Früherziehung (HFE)

**முன்கூட்டிய பாதுகாப்புக் கல்வி என்பது பிறந்த குழந்தைகள் தொடக்கம், பாடசாலை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் வரையிலான குழந்தைகளுக்கான முன் கூட்டிய ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகும். வளர்ச்சியில் குறைபாடுகள் தென்படும் குழந்தைகள் மற்றும் முன்னேற்றம் ஆபத்தாக அமையும் குழந்தைகளை வழிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். அறிவாற்றல், மொழியாற்றல், உடல் இயக்கம், உணர்ச்சி மற்றும் சூழலை உணர்தல் ஆகியவற்றில் வளர்ச்சிக் குறைபாடுகள் வெளிப்படும்.**

**ஆராய்ந்து தெளிவுபடுத்தல், பாதுகாப்பு மற்றும் வளர்ப்புமுறை உதவி, அதேபோல் தேவையான ஊக்குவிப்பு ஆகியவை குடும்ப சூழலுக்கேற்ப நெறிப்படுத்தப்பட்டு, வழிகாட்டப்படும்.**

**முன்கூட்டிய பாதுகாப்புக் கல்வியின் கால வரையறை குழந்தையின் முன்னேற்றம் மற்றும் பெற்றோரின் தேவை ஆகியவற்றில் தங்கியுள்ளது.**